அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

*அ.எண்.280/2015*
*தேதி : 24-11.2015*

# தமிழகத்திற்கு நிவாரண நிதி
# தமிழகத்திற்கு மழை வெள்ள நிவாரண நிதி
# மத்திய அரசு
# முதல்கட்டமாக ரூ10,000 கோடி வழங்க வேண்டும்
# சமக நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் கோரிக்கை

வட கிழக்கு பருவ மழை கடந்த இருபது நாட்களில் தமிழகமெங்கும் கொட்டித்தீர்த்துள்ளது. மேலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கே கன மழை தொடர்ந்து பெய்து வருகிறது. கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் உள்ள அணைக்கட்டுகள், ஏரிகள், குளங்கள் நிரம்பி வழிவதால் ஆங்காங்கே வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 4 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏறத்தாழ 170 பேர் இறந்த செய்தி மிகுந்த வேதனையளிக்கிறது. மேலும் ஆங்காங்கே உயிரிழப்புகள் தொடர்கின்றன. வீடுகளை, உடமைகளை அனைவருக்கும் முழு அளவிலான இழப்பீட்டை நிவாரணத் தொகையாக வழங்க இயலுமா என்பது சந்தேகம் தான். பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் தண்ணீரில் மூழ்கி கிடக்கின்றன. பல்வேறு பகுதிகளில் நெல், கரும்பு, வாழை, சோளம், கேழ்வரகு போன்ற பயிர்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்து விவசாயிகளுக்கு மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளன.

முதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய நிவாரணம் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கு பிறகு ஏற்பட்ட பாதிப்புகள்

அனைத்தும் முழுமையாக சீர்படுத்தப்படுவதற்கு உரிய பணிகள் நம் முன்னே நிற்கிறது. அதற்கு எத்தனை ஆயிரம் கோடிகள் தேவை என்பதை இப்போது உடனடியாக கணக்கிட முடியாது.

தமிழக அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை விரைந்து வழங்குவதற்கும், சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கும் ஏற்றவாறு மத்திய அரசு முதற்கட்டமாக ரூபாய் 10,000 கோடியை உடனடியாக வழங்க வேண்டும்.

வெள்ள நிவாரண பணிகளை அரசியல் நோக்கத்தோடு பார்க்காமல் அனைத்து அரசியல் இயக்கங்களும் மற்றும் பொது சேவை இயக்கங்களும் பாதிப்புக்குள்ளான மக்களை கண்டறிந்து அவர்களின் தேவையை கேட்டறிந்து அவர்களுக்கு சரியான நிவாரணம் கிடைத்திட உழைத்திட வேண்டும். சமத்துவ மக்கள் கட்சியின் நிர்வாகிகளும், தொண்டர்களும் வெள்ள நிவாரண பணிகளில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றும் நாளையும் திருநெல்வேலி மாவட்டத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட இருக்கிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்